ಒಟ್ಟು ಪ್ರಶೆಗಳ ಸಂಖ್ಯೆ : 34 ]
Total No. of Questions : 34 ]

[ ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 4
[ Total No. of Printed Pages : 4

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 48-T (OS)**

**Code No. : 48-T (OS)**

**ಶಿಕ್ಷಣ – III**

**EDUCATION – III**

# ವಿಷಯಾಧಾರಿತ ಬೋಧನಾ ಪದ್ಧತಿ – I

# ಸಮಾಜ ವಿಜ್ಞಾನ

# CONTENT BASED METHODOLOGY OF TEACHING – I

# SOCIAL SCIENCE

(ತಮಿಳು ಭಾಷಾಂತರ)

( Tamil Version )

**(ಹಳೆ ಪಠ್ಯವಸ್ತು)**

**( Old Syllabus )**

ದಿನಾಂಕ : 07. 06. 2017 ]
Date : 07. 06. 2017 ]

ಸಮಯ : ಮಧ್ಯಾಹ–2.00 ರಿಂದ 5.00 ರವರೆಗೆ ]
Time : 2.00 P.M. to 5.00 P.M. ]

[ ಪರಮಾವಧಿ ಅಂಕಗಳು : 100
[ Max. Marks : 100

*ಅಭ್ಯರ್ಥಿಯ ನೋಂದಣಿ ಸಂಖ್ಯೆ*
*Register Number of the Candidate*

## பகுதி – A

I. கீழ்க்காணும் வினாக்களில் எவையேனும் **நான்கு** வினாக்களுக்கு மட்டும், ஒவ்வொன்றிற்கும் மூன்று பக்கங்களுக்கு மிகாமல் விடையளிக்கவும். ஒரே வினாவின் பாகம் (a) மற்றும் பாகம் (b) இரண்டிற்கும் விடையளிக்கவும். ஒவ்வொரு வினாவிற்கும் பத்து மதிப்பெண்கள் வழங்கப்படும் : $4 \times 10 = 40$

1. a) வரலாறு என்பதன் பொருள், இயல்பு மற்றும் முக்கியத்துவம் (meaning, nature and importance) இவற்றைக் குறிப்பிடுக.

   b) வரலாறு ஓர் அறிவியலா அல்லது கலையா ? விவாதி. 6 + 4

2. a) குடிமையியல் (Civics) என்றால் என்ன ? குடிமையியலைக் கற்பித்த ன் ஐந்து குறிக்கோள்கள் (aims) பற்றி எழுதுக.

   b) சமூக அறிவியல் கற்பித்த ன் நோக்கங்களில் ஏதேனும் நான்கினைக் கூறி அவை ஒவ்வொன்றின் சுருக்கமான விளக்கம் தருக. 6 + 4

3. a) 'மூலாதார அலகு' (Resource unit) என்றால் என்ன ? மூலாதார அலகின் நன்மைகளில் (benefits) ஏதேனும் ஐந்தினை விவரி.

   b) ஒரு மூலாதார அலகின் சிறப்பியல்புகளில் (characteristics) ஏதேனும் நான்கினைப் பற்றி சுருக்கமாக எழுதுக. 6 + 4

4. a) ஒரு சிறந்த சமூக அறிவியல் பாடப்புத்தகத்தின் தேவைகளில் ஏதேனும் ஆறினை விவரி.

   b) ஒரு சிறந்த நிலவரைபடத்தின் (a good map) சிறப்பியல்புகளைக் குறிப்பிடுக. 6 + 4

5. a) செயல்திட்ட முறையின் (project method) பொருள், படிநிலைகள், நன்மைகள் மற்றும் தீமைகளைக் குறிப்பிடுக.

   b) விதிவிளக்க முறையின் (Deductive method) பொருள், கொள்கைகள் மற்றும் நன்மைகளைக் குறிப்பிடுக. 6 + 4

6. a) உமது பள்ளியில் சமூக அறிவியல் அறையை எங்ஙனம் தயார் (equip) செய்வீர்கள் ?

   b) சமூக அறிவியலைக் கற்பிப்பதற்கு என ஒரு தனியறையைக் கொண்டிருப்பது இன்றியமையாதது. ஏன் ? 6 + 4

7. a) அலகு சோதனையின் (unit test) பொருள் மற்றும் முக்கியத்துவத்தை விவரி

   b) ஓர் அலகு சோதனையின் நன்மைகளை விவரி. 6 + 4

## பகுதி – B

II. கீழ்க்காணும் வினாக்களில் ஏதேனும் **ஏழு** வினாக்களுக்கு மட்டும் ஒவ்வொன்றிற்கும் ஒரு பக்கத்திற்கு மிகாதவாறு விடையளிக்கவும். ஒவ்வொரு வினாவிற்கும் ஐந்து மதிப்பெண்கள் கொடுக்கப்படும். 7 × 5 = 35

8. புவியியல் மற்றும் வரலாறு இவற்றுக்கிடையேயுள்ள ஒட்டுறவை (correlation) விவரி.

9. மாணாக்கர்களுக்குக் குடிமையியலை கற்பித்த ன் மூலம், நீவிர் எவ்வாறு அவர்களிடம் அடிப்படைக் கடமைகள் (fundamental duties) குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவீர்கள் ?

10. ஒரு சிறந்த பாடத்திட்டத்தின் (lesson plan) சிறப்பியல்புகளைக் குறிப்பிடுக.

11. சமூக அறிவியல் கற்பித்த ல் செய்தித்தாள்களின் பயன்களில் ஏதேனும் ஐந்தினைக் குறிப்பிடுக.

12. பள்ளிகளில் பொழுதுபோக்கு சங்கங்களின் (hobby clubs) தேவையினை விவரி.

13. சமூக அறிவியல் மாணாக்கருக்கு உள்ளூர் நூலகங்கள் (local libraries) எவ்வாறு பயனுள்ளதாக இருக்கின்றன ?

14. குறைதீர் கற்பித்தலுக்குப் (Remedial teaching) பொருத்தமான உத்திகளில் (strategies) ஏதேனும் ஐந்தினைக் கொண்ட ஒரு பட்டியலை அமைக்கவும்.

15. சமூக அறிவியல் பாடத்தில் களப்பயணத்தின் தேவை யாது ?

16. புறவய வகை சோதனைகளின் (objective type tests) நன்மைகள் யாவை ?

17. சமூக அறிவிய ல் மதிப்பீடு செய்யும்போது ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை விவரி.

## பகுதி – C

III. கீழ்க்காணும் வினாக்களில் ஏதேனும் **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் ஒவ்வொன்றிற்கும் அரை பக்கத்திற்கு மிகாதவாறு விடையளிக்கவும். ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று மதிப்பெண்கள் வழங்கப்படும் : 5 × 3 = 15

18. காலக்கோடு வரைபடத்தின் (time-line graph) வகைகள் யாவை ?

19. வரலாற்றினை கற்பித்த ன் குறிக்கோள்களைப் (aims) பட்டிய டுக.

20. புவியியலைக் கற்பித்த ன் பயன்பாட்டு மதிப்பினை (utilitarian value) விவரி.

21. சமூக அறிவியல் கற்பித்த ல் இணையத்தை (Internet) எங்ஙனம் பயன்படுத்த முடியும் ?

22. இணைப்பாடத் திட்ட செயல்களின் (co-curricular activities) வகைகளில் ஏதேனும் மூன்றினைக் குறிப்பிடுக.

23. ஓர் அருங்காட்சியகத்திற்கு மாணாக்கர்களை அழைத்து செல்வதன் பயன்களில் ஏதேனும் மூன்றினைக் குறிப்பிடுக.

24. மதிப்பீட்டின் (evaluation) முக்கியமான தூண்கள் யாவை ?

## பகுதி – D

IV. கீழ்க்காணும் **அனைத்து** வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களுக்கு மிகாமல் விடையளிக்கவும். ஒவ்வொரு வினாவிற்கும் ஒரு மதிப்பெண் கொடுக்கப்படும். 10 × 1 = 10

25. 'ஒரேயொரு வரலாறு மட்டுமே உள்ளது. அது மனிதனின் வரலாறு' - இவ்வாறு வரையறுத்தவர் யார் ?

26. மாணாக்கர்களிடம் இடம் பற்றிய ஒரு கருத்துருவை (the concept of place) வளர்க்க உதவும் கருவி ஒன்றை (a tool) பரிந்துரைக்க.

27. நன்னெறி கல்வி (moral education) தொடர்பான பொன்மொழிகளில் ஏதேனும் இரண்டினை எழுதுக.

28. உலக உருண்டை (globe) என்றால் என்ன ?

29. கல்விச் சுற்றுலாவின் (Eduational tour) ஏதேனும் இரண்டு பயன்களைக் குறிப்பிடுக.

30. ஒரு நில வரைபடத்தில் பழுப்பு நிறம் (brown colour) எதைக் குறிக்கிறது ?.

31. காவிரி ஆற்றின் தொடக்கப்புள்ளி எது ?

32. சமூக அறிவியல் கற்பித்தலுக்குத் தேவையான குறிப்புதவி புத்தகங்களில் ஏதேனும் இரண்டினை எழுதுக.

33. வாய்மொழி சோதனையின் (oral examination) பயன்களில் ஏதேனும் இரண்டினைக் குறிப்பிடுக.

34. சமூக அறிவிய ல் பல்விடை வினா ஒன்றினை (multiple choice question) அமைக்கவும்.